அசல் வழக்கு எண். 242/2016 தேதி 11.01.2024

வா.சா.1- இளையராணி

2 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

தாவா சொத்தை என் தந்தை கிரையம் பெற்ற போது நான் இளவராக இருந்தேன். தாவா சொத்தை என் தந்தை கிரையம் பெற்ற விவரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கு என் தந்தை மற்றும் 1ம் பிரதிவாதி பெயரில் கூட்டு பட்டா உள்ளது என்றால் சரியல்ல. பூர்வீக சொத்து என் தந்தை பெயரில் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளது. சர்வே எண்.710/4 ற்கு என் தந்தை பெயரிலும், சர்வே எண்.710/5 ற்கு 1ம் பிரதிவாதி பெயரிலும் வருவாய் துறை ஆவணங்கள் உள்ளது. சர்வே எண்.710/5 ற்கு 1ம் பிரதிவாதி பெயரில் உள்ள பட்டாவை மாற்ற கோரி ஆட்சேபனை மனு கொடுத்துள்ளேன். மேற்படி ஆட்சேபனை மனுவை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. தாவா B பட்டியல் சொத்தை பொறுத்து வருவாய் துறையால் முறையாக விசாரணை செய்யப்பட்டு ஆவணங்கள் அடிப்படையில் 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2 முதல் 5 பிரதிவாதிகளை பொறுத்து தாவா வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-P.பாலமுருகன்

**Additional District Munsif,**
**Kulithalai.**